ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2176/23 - 2020 මැයි මස 22 වැනි සිකුරාදා - 2020.05.22

*2176/23 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பு

அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 43(1) ஆம் உறுப்புரை மற்றும் 46(1) (அ) ஆம் உறுப்புரையின்வண்ணம் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்து, என்னால் 2019, திசெம்பர் மாதம் 10 ஆந் திகதிய 2153/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு, காலத்துக்குக்காலம் திருத்தப்பட்ட அறிவித்தலானது 2020, மே மாதம் 21 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்குவருமாறு கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு மேலும் திருத்தப்படுகின்றது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**கோட்டாபய ராஜபக்ஷ,**
சனாதிபதி.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 01,
2020, மே 21.

1A - G 32237— 377 (2020/05)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

### அட்டவணை

(1) அவ்வறிவித்தலில் இல. (14) "பொதுநிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்" என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:-

(அ) அதன் நிரல் II இல் 13 ஆவது விடயத்தை நீக்குவதன் மூலம்;

(2) அவ்வறிவித்தலில் இல. (1) "பாதுகாப்பு அமைச்சர்" என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:-

(அ) அதன் நிரல் I இல் 35 ஆவது விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன்மூலம்;

36. குறைந்த வருமானம்பெறும், குறைந்த கல்வித் தகைமைகளுடன்கூடிய மக்களின் நிபுணத்துவங்களை உயர்வடையச் செய்து, தொழில்துறையினர்களின்மூலம் முகாமை செய்யும் மனிதவளக் குழாமொன்றினூடாக அவர்களை நாட்டினது அபிவிருத்தியின் பல்வேறு பணிகளில் ஈடுபடுத்துதல்

37. இரசாயன ஆயுதங்களின் மேம்படுத்துகை, உற்பத்தி செய்தல், சேகரித்தல் மற்றும் பாவித்தலைத் தடைசெய்தல் மற்றும் அவற்றை அழித்தல்பற்றிய சமவாயத்தை செயற்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள்

38. ஆயுதப்படை சேவை உறுப்பினர்களுக்கு வீடுகளை நிர்மாணிப்பதற்காக நிதி வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல், உதவி வழங்குதல், ஆயுதப்படை சேவை உறுப்பினர்களால் நிதி நிறுவனங்களிலிருந்து கடன் பெற்றுக்கொள்வதற்காக மற்றும் அக்கடன்களைச் செலுத்துவதற்காக உதவி வழங்குதல்

39. பொலிஸ் உத்தியோகத்தர்களினதும் ஏனைய சட்டத்தைச் செயற்படுத்தும் உத்தியோகத்தர்களினதும் தொழில்சார் அறிவு மற்றும் திறன்களை அவர்களின் தொழில்களுக்கு ஏற்றவாறு மேம்படுத்துதல்

40. முப்படைகள் மற்றும் சிவில் உத்தியோகத்தர்களுக்காக முறைமையியல்கள் மற்றும் திறமுறைகள் பற்றிய கல்வியைப் பெற்றுக்கொடுத்தல்

(ஆ) அதன் நிரல் I இல் 35 ஆவது விடயத்திலிருந்து மீண்டும் இலக்கமிடுவதன்மூலம்;

(இ) அதன் நிரல் II இல் 31 ஆவது விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன்மூலம்;

32. பல்நோக்கு அபிவிருத்திச் செயலணித் திணைக்களம்

33. மிலோதா நிறுவனம் (Academy of Financial Studies)

34. இரசாயன ஆயுதங்கள் சமவாயத்தைச் செயற்படுத்தும் தேசிய அதிகாரசபை

35. அப்பி வெனுவென் அப்பி நிதியம்

36. தேசிய பொலிஸ் பயிற்சி நிறுவனம்

37. இலங்கைத் தேசியப் பாதுகாப்புக் கல்வியியல் நிறுவனம்

(ஈ) நிரல் III இல் "(2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க) இலங்கை அனர்த்த முகாமைச் சட்டம்" எனும் விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன்மூலம்;

- (2007 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க) இரசாயன ஆயுதங்கள் சமவாயம் பற்றிய சட்டம்

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.